**கவனிக்க**.- *2018.08.10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* III *பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2085 - 2018 අගෝස්තු මස 17 වැනි සිකුරාදා - 2018.08.17

*2085 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)


# பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| *சட்டங்கள்* | - |
| *சட்டமூலங்கள்* | - |
| *மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள்* | - |
| *உயர் நீதிமன்ற அறிவித்தல்கள்* | - |
| *உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள்* | - |
| *மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள்* | - |
| *கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள்* | - |
| *பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள்* | - |
| *பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்* | *152* |
| *மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள்* | - |
| *சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள்* | - |
| *நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல்* | - |
| *நானாவித அறிவித்தல்கள்* | - |


***கவனிக்க***.- *நிதி சட்டமூலம் 2018, ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2018, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஓகத்து மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

151-B81440-353 (2018/08)

# பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள்

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

பிசுக்கால் ஏல விற்பனை

*திருத்தப்பட்ட வகையில் 1990 ஆம் ஆண்டின், 02 ஆம் இலக்க, கடன் மீள் அறவிடும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மற்றும் அதனுடன் சார்ந்த தீர்வுக் கட்டளை மற்றும் முற்றான கட்டளை தொடர்பான காரணம் ஒன்று.*

*ஹற்றன் நஷனல் பேன்க் பீ.எல்.சீ. (முன்னர் வரையறுக்கப்பட்ட ஹற்றன் நஷனல் வங்கி)*

*பதிவு அலுவலகம் : இல. 479 (முன்பு 481), டி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.*

*கிளை: களனிய, பியகம வீதியில் ரஜமஹாவிஹார சந்தி.*

*வழக்காளி*

*கொழும்பு மாவட்ட நீதிமன்றம்*
*எஸ்கீசி இல. : 231/2014*
*வழக்கு இல. : டீ. ஆர்*
*தன்மை : டீ. ஆர்*
*நடவடிக்கை : சுருக்கம்*
*பெறுமதி : ரூபா 481,000.00*

*- எதிர் -*

*களனிய, பெத்தியாகொட, மேவெல்ல வீதி, இல. 307/18, கொண்ட இடத்தில் "எஸ். பீ. கிரியோஷன்ஸ்" எனும் பெயரில் முகவரியின் கீழ் மற்றும் தலைப்பின் கீழ் தனியார் வர்த்தகமொன்றிமை நடாத்திச் செல்லும் தெனிபிட்டிய பல்லியகுருகே சமன்சிறி சம்பத்*

*எதிராளி*

*மேற்படி குறிப்பிடப்பட்ட வழக்கில் எனக்கு வழங்கப்பட்ட எஸ்கீஸி தடைக்கட்டளைப் படி கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் என்னால் தடைக்குட்படுத்திய பின்னரும் மேற்குறிப்பிட்ட எதிராளியாகிய தெனிபிட்டிய பல்லியகுருகே சமன்சிறி சம்பத் என்பவரால் வழக்காளி வங்கிக்கு ரூ. 4,80,320.08 தொகை மற்றும் 2014 யூன் மாதம் 20 ஆந் திகதி தொடக்கம் முழுத் தொகையை செலுத்தி முடியும் வரை வருடாந்தம் நூற்றுக்கு பத்தொன்பது வீத (19%) வட்டியும், வழக்கு செலவீனங்களும் எதிராளியினால் வழக்காளிக்கு செலுத்த வேண்டும் என கட்டளையிடப்பட்டுள்ளதுடன், குறித்த தொகையை செலுத்துவதற்கு எதிராளி தவறியுள்ள படியால் இந் நீதிமன்றத்தால் எனக்கு கிடைக்கப்பட்டுளள எஸ்கீஸி தடைக்கட்டளை படி என்னால் தடை செய்யப்பட்டுள்ள எதிராளிக்கு சொந்தமான கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட அசையாத ஆதனம்,*

*2018 செப்தெம்பர் மாதம் 28 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு மேற்படி பெயரிடப்பட்ட எதிராளியின் ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பிசுக்கால் ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.*

*ஏலம் முடிவடைந்தவுடன் உத்தேச கொள்வனவாளர் விற்பனை விலையின் 25% தொகையும், நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் படி அரசாங்க கடடணங்களும், விற்பனை தொகையிலிருந்து 25% ஆன ஏலதாரரின் தரகு பணமும், உள்ளூராட்சி சபை கட்டணங்கள், ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு செலவுகளும் ஏலத்தாரருக்கு செலுத்த வேண்டும். மேலும் கொள்வனவாளரால் மிகுதி 75% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் அவ் வழக்குக்கு பற்றாக குறித்த கம்பஹா நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட வேண்டும்.*

***ஆதனத்திற்கு உட்பிரசேவிக்கும் வழி.*** *- கொழும்பு, கண்டி வீதியில் பேலியகொட 4 ஆம் மைல்கல்லிற்கு அருகாமையில் தெற்கே திரும்பி பியகம பாதைக்கு வரும் போது பெத்தியாகொட அல்கோப்ரோன்ஸ் காட்சியறைக்கு அருகாமையில் தெற்கே திரும்பி மேவெல்ல வீதியில் சுமார் 250 மீற்றர் தூரம் முன்னோக்கி போகும் போது தெற்கே திரும்பி சிறிது தூரம் செல்கையில் 307/18 ஆம் இலக்கம் கொண்ட ஆதனம் தெற்கு பக்கத்தில் அமைந்துள்ளது.*

**அட்டவணை**

மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் சியனே கோரளை அதிகாரி பத்துவையில் களனிய பிரதேச செயலாளர் பிரிவில் மெவெல்ல பெத்தியாகொடயில் அமைந்துள்ள மெவல்ல வீதியில் வரிப்பணம் இல. 307/18 கொண்ட "பண்டியகஹவத்த அல்லது மீகஹகொட்டுவ" எனும் பெயரில் அடையாளங் காணப்படும் காணிக்கு அனுமதிபெற்ற நில அளவையாளர் எச். எஸ். பெரேரா அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 35/1962 கொண்ட 1962.13.27 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைப்படத்தில் துண்டு எப். என அடையாளங் காட்டப்பட்டுள்ள துண்டிற்கு எல்லைகள்: வடக்கு : பிட எலந்த; கிழக்கு: குறித்த காணியின் துண்டு ஜீ என காட்டப்பட்டுள்ள துண்டு; தெற்கு: குறித்த காணியின் துண்டு எல் (அடி 10 பாதைக்காக பிரிதெடுக்கப்பட்டுள்ளது) மேற்கு: தெலம்பகஹவத்த மூலமாகும். குறித்த வரைபடம் இல. 35/1962 இற்கு அமைய இருபத்தைந்து பர்ச்சர்ஸ் (0ஏ. 0றூ. 25பே.) விஸ்தீரணம் கொண்ட காணி கொழும்பு காணிப் பதிவகத்தில் பதிவேட்டு இல. சீ 715/147 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பதிவுகாரர்/உதவி பிசுக்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
கம்பஹா.

2018, யூலை 30.

08 - 663